(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவையிலிருந்து வெளியேறினர்.)

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

34—

தொழிற்பேட்டை.

*18715—திரு. ப. டில்லி பாபு:

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்ட 5 தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்படை செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்) இத்தொழில் நிறுவனங்கள் தற்பொழுது சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.